பக்கங்கள் 16+4

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை 23.06.2024 அதிர்வு 327

## பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீடிப்பு

பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்த கோரிக்கை 04





### ரணிலின் அதிரடி வியூகத்தால்

# மலர்கின்றது தேசிய அரசு?

### ராஜித உள்ளிட்ட முக்கிய புள்ளிகளுக்கு அமைச்சுப் பதவி

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் 5 அல்லது 12 ஆம் திகதி நடைபெறும் என பரவலாக எதிர்பார்க்கப்படும் நிலையில், அடுத்த வாரம் முதல் தெற்கு அரசியல் களத்தில் தரமான - சிறப்பான சம்பவங்கள் அரங்கேறும் என அறியமுடிகின்றது.

ஏட்டிக்குப் போட்டியாகக் கட்சி தாவல்களும் இடம்பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் திரைமறைவில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. 04

# யாழ். நோக்கி வந்த பஸ்ஸுடன் ஓட்டோ மோதி கோர விபத்து

### இரண்டு இளைஞர்கள் பலி; இருவர் படுகாயம்

அனுராதபுரத்தில் இடம்பெற்ற கோர விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதெனிய பிரதான வீதியில் இன்று காலை தனியார் பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

எப்பாவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடியாவ பிரதேசத்தில் வசிக்கும் 24 மற்றும் 19 வயதுடைய இளைஞர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர். 04



## பஸ் – லொறி விபத்தில் ஒருவர் காயம்



(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் – அவிசாவளை வீதியில் கினிகத்தேன கடவல பகுதியில் அரச பஸ்ஸ/ம் லொறியும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றும், ஹட்டனில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

லொறியின் சாரதி வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த நபர் சிகிச்சைக்காக கினிகத்தேனை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கோப்பாயில் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – கோப்பாய், இராச வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று இரவு 11 மணியளவில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வீதியில் பயணித்தவர்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்த நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர்.

சம்பவ இடத்திலிருந்து சுமார் 20 மீற்றர் தொலைவில் மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு மற்றும் கோடரி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் அடையாளம் காணப்படாத நிலையில் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# போதை பொருளுடன் சிவனொளி பாத மலைக்கு சென்ற 183 பேர் ஹட்டன் பொலிஸாரால் கைது!

**(மஸ்கெலியா)**

வெசாக் மாதத்தில் சிவனொளி பாத மலை பருவ காலத்தில், பல்வேறு போதை பொருள்களுடன் சிவனொளி பாத மலைக்குத் தரிசனம் செய்ய வந்த 183 பேர் ஹட்டன் போதைப் பொருள் குற்ற தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஹட்டன் தலைமையக பொலிஸ் குற்ற தடுப்பு ஊழல் ஒழிப்பு பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த ஆறு மாத கால சிவனொளி பாத மலைக்கு யாத்திரை காலத்தில் பல்வேறு போதை பொருள்களுடன் சிவனொளி பாத மலைக்கு வழிபட வந்த 183 போதைக்கு அடிமையானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன் பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகம மற்றும் ஹட்டன் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். பாரூக் மற்றும் ஹட்டன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன ஆகியோரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் 20 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள். இளமையில் வாழும் இந்த இளைஞர்கள் போதைப் பொருளின் பக்கம் திரும்புவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

முடிந்த வரையில் சிறு வயதில் இருந்தே தங்களது பிள்ளைகளை மிகவும் கட்டுப்பாடு தெய்வ வழிபாடு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்க்க பெற்றோர்கள் முன் வர வேண்டும்.

அதேபோல் இன்றைய சிறு பராயத்தில் உள்ள, குறிப்பாக 16 வயது முதல் 28 வயது உடைய அனைவரும் வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்ல பிரஜையாக வாழ வேண்டும்.- என்றார்.

# குடி தண்ணீர்த் தொகுதி திறந்து வைப்பு



**(என். ஹரன்)**

யாழ்ப்பாணம், மூளாய் மக்களின் குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் நேற்றுமுன் தினம் (21) வெள்ளிக்கிழமை மூளாய் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் குடி தண்ணீர்த் தொகுதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எழுக மூளாய் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்புடனும், பழைய மாணவர்களும் மண்ணின் மைந்தர்களும் கனடாவில் வசிப்பவர்களுமான முத்துக்குமார சூரியர் சூர்யபிரகாஸ், உதயசங்கரன் சிவசங்கரன் ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன் இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டது. பாடசாலை அதிபர் தலைமையில் இது திறந்து வைக்கப்பட்டது.




இந்த நிகழ்வில் மூளாய் சித்தி விநாயகர் தேவஸ்தான குரு பிரம்மஸ்ரீ சி.ஜெயானந்த சர்மா, மூளாய் கிறிஸ்தவ தேவாலய அருட்பணி டெய்ஸி ஆசீர்வாதம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.மோகன்ராஜ், குடும்ப நல சேவையாளர் ச.கஜேந்தினி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உதயமலர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ச.சர்மிலன், கிராம உத்தியோகத்தர் ந.சிவரூபன் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# எல்லை தாண்டி மீன்பிடித்த 22 தமிழக மீனவர்கள் கைது

(எஸ்.நிதர்ஷன், எஸ்.ஆர்.லெம்பேட்)

எல்லை தாண்டி மீன் பிடித்த 22 தமிழக மீனவர்களை மூன்று படகுகளுடன் இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்கள் கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குப் பின்னர் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் படகுகளுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் மீன் பிடித் துறைமுகத்தில் இருந்து நேற்று 507 விசைப்படகுகளில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடி அனுமதிச் சீட்டு பெற்று மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.

அவர்களில் 22 மீனவர்கள் இன்று அதிகாலை சுமார் 2 மணியளவில் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

# வவுனியாவில் 3 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை; ஒருவர் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 3 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா, மகாறம்பைக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்றில் தந்தை சிறுகுற்றச் செயல் தொடர்பில் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் உள்ள நிலையில் தாயார் கூலி வேலைக்குச் சென்று குடும்பத்தைப் பார்த்து வருகின்றார்.

தாயார் கூலி வேலைக்குச் செல்லும் போது தனது பிள்ளைகளை அயலில் உள்ள வீட்டில் விட்டுச் செல்வது வழமை. இவ்வாறு விட்டுச் சென்ற நிலையில் 3 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து வவுனியா பொலிஸில் தாயாரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரை மேலதிகவிசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மலர்கின்றது...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீது சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்துள்ள முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து புதிய கூட்டணியில் இணையத் திட்டமிட்டுள்ளார். ராஜித சேனாரத்னவும் ரணில் பக்கம் 'பல்டி' அடிக்கவுள்ளார்.

இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிட்டது என்ற அறிவிப்பு எதிர்வரும் 27 அல்லது 28 ஆம் திகதி வெளியாகும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில், அதன்பின்னர் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரையாற்றத் திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்த உரையின் மூலம் எதிரணி உறுப்பினர்களுக்கு அவர் அழைப்பு விடுப்பார் எனவும், அந்த அழைப்பை யேற்றே ராஜித, பொன்சேகா மற்றும் மேலும் சில எம்.பிக்கள் ரணிலுக்கு நேசக்கரம் நீட்டுவார்கள் எனவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாவல்கள் இனிதே அரங்கேறிய பின்னர் அமைச்சரவையும் மறுசீரமைக்கப்படவுள்ளது எனவும், ராஜிதவுக்கு முக்கிய அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

மறுபுறத்திலதயாசிறிஜயசேகர,திலங்க சுமதிபால உள்ளிட்டவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கவுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவுடனும் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.

தேசிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கு டலஸ் மற்றும் சரித ஹேரத் உள்ளிட்டவர்கள் முன்னெடுக்கும் முயற்சி இன்னும் வெற்றியளிக்கவில்லை.

இறுதியில் இவர்களும் சஜித் கூட்டணியுடனேயே இணைவார்கள் என அரசியல் பிரமுகர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் களநிலைவரம் எவ்வாறு உள்ளது என்பது தொடர்பில் அரச உளவு பிரிவுகள் ஜுலை நடுப்பகுதிக்குள்ஜனாதிபதியிடம் அறிக்கை கையளிக்கவுள்ளன எனவும், அந்த அறிக்கைகளின் பிரகாரமே ஜனாதிபதியின் முடிவு அமையக்கூடும் எனவும் சில அரசியல் பிரமுகர்கள் கருதுகின்றனர்.

சிலவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டால், எந்தப் பக்கம் நிற்பது என்ற குழப்பத்தால் சில உறுப்பினர்கள் முடிவெடுப்பதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். எனவே, தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியான பின்னரே அவர்கள் தமது மௌனத்தை கலைத்து நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவார்கள்.

அதேவேளை, சிறு கட்சிகளை வளைத்துப் போடும் 'ஒப்பரேஷனை' ரணில் விக்கிரமசிங்க வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றார். இ.தொ.கா., ஈ.பி.டி.பி., தேசிய காங்கிரஸ், வியாழேந்திரன் அணி என்பன ரணிலுக்கான ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளன.

கருணா, பிள்ளையான் உள்ளிட்டவர்களும் ரணிலுடன் கூட்டுப் பயணத்துக்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பவற்றின் எம்.பிக்கள்கூட ரணிலுடன் நல்லுறவைப் பேணி வருகின்றனர். அடுத்து வரும் நாட்களில் வடக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் ரணில் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு திரட்டி புதிய கூட்டணியால் நடத்தப்படும் 2ஆவது மக்கள் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி மொனராகலையில் நடைபெறவுள்ளது. இதன்போது முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலர் ரணிலுக்கான ஆதரவை வெளிப்படுத்தி மேடையேறவுள்ளனர்.

## பிரித்தானியாவில்...

நிராகரிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா தடை செய்யப்பட்ட அமைப்புகளின் மேல்முறையீட்டு ஆணையம் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை மனுவைப் பரிசீலித்த மேன்முறையீட்டு ஆணைக்குழு, வெளிப்படையான தீர்மானத்தை வழங்கி இந்த கோரிக்கையை நிராகரித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

அஹிம்சை வழிகளில் தனது அரசியல் மற்றும் சித்தாந்த இலக்குகளை அடைய முயல்வதால், இங்கிலாந்தில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரியிருந்தது.

2001 மார்ச் 29ஆம் திகதி பிரித்தானிய இராஜாங்க செயலாளர் விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் சேர்த்தார்.

இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்குவதற்கு முன்னரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 2018 டிசம்பர் 18ஆம் திகதி பயங்கரவாதச் சட்டம் 2000 இன் பிரிவு 4 இன் படி, அட்டவணை இரண்டில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் நீக்கப்பட வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உள்துறை அமைச்சுக்கு விண்ணப்பித்தது.

எனினும், இந்த விண்ணப்பம் 2019 மார்ச் 8ஆம் திகதி பயங்கரவாத அச்சுறுத்தல்களின் மதிப்பாய்வு செயல் முறையைத் தொடர்ந்து வெளியுறவுத்துறை நிராகரித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். நோக்கி...

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் தலாவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சுற்றுலா வந்து கொண்டிருந்த பஸ்ஸும், அனுராதபுரத்தில் இருந்து தலாவ நோக்கிப் பயணித்த ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதாலே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ வீதிக்கு எதிர்ப்புறம் வந்த பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

அனுராதபுரத்தில் நேற்று இரவு இடம் பெற்ற பொசன் கொண்டாட்டத்தில் கலந்து விட்டு ஓட்டோவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞர்களே விபத்தில் சிக்கியுள்ளனர்.

பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறை மீது போலியான சாயம் பூச நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்!

## ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

யுத்த காலத்தில் காரைதீவின் பல்லாயிரக் கணக்கான தமிழ் சகோதரர்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் சம்மாந்துறை முஸ்லிம் சமூகம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அப்படிப்பட்ட மக்கள் மீது இனவாதமாக விரல் நீட்டுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதே போன்று அவர்கள் இழந்து நிற்கும் உரிமைகள், காணிப் பிரச்சினை, பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்த வேண்டிய தேவை, நிர்வாக அதிகாரிகளுக்கு முறையற்ற நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை போன்ற சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். உடனடியாக அந்த மக்களின் தேவைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம். முஹம்மட் ஹரீஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து தனது மண்ணின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தி வந்த அம்பாறை மாவட்டத்தின் இதயமாக இருக்கும் சம்மாந்துறைத் தொகுதி இன்று தனது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் எல்லோரும் வந்து பந்தாடும் இடமாக சம்மாந்துறை மாறி வருகிறது. இதனை எண்ணி நாங்கள் வேதனையுடன் இருக்கிறோம். அந்த மாவட்டத்தில் அந்த மக்களின் வாக்குகளை பெற்ற அந்த மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதி என்ற வகையில் அங்கு நடைபெறும் அநியாயங்களைச் சுட்டிக்காட்டி நீதி கோரி உரியவர்களிடம் நாங்கள் பேசியும் இந்த நிமிடம்வரை நியாயங்கள் கிடைக்கவில்லை.

அந்த மக்களின் நிர்வாகப் பதவிகளில் நிறைய அநியாயங்கள் நடக்கின்றன. நாட்டின் சட்டங்களை மீறி, உள்ளூராட்சி சட்டங்கள், நகர திட்டமிடல் சட்டங்கள் போன்ற பல சட்டங்களை மீறி எவ்வித முறையான அனுமதிகளுமின்றி சில நிர்மாணப் பணிகளை செய்கின்ற போது சட்டரீதியாக செய்யுமாறு பணித்தாலும் அவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாது சட்டத்தை மீறி நடக்கும் போது அதை இனவாத கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். அது பற்றி நாடாளுமன்ற அமர்விலும் பேசப்பட்டுள்ளது.

பல வரலாறுகளைக் கூறி, சம்மாந்துறை மக்களைப் பிழையான கண்ணோட்டத்தில் இன்று காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அநீதிக்குள்ளான சம்மாந்துறை மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதி என்ற வகையில் இன்னும் அநீதிக்குள்ளாக்கும், இனவாத சாயம் பூசும் நடவடிக்கையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. 1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காரைதீவில் வன்முறை மூண்டபோது, காரைதீவின் பல்லாயிரக் கணக்கான தமிழ் சகோதரர்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் சம்மாந்துறை முஸ்லிம் சமூகம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அந்த மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்பட்டு உடனடியாக அந்த மக்களின் தேவைகள் நிவர்த்திகப்பட வேண்டும்.- என்றார்.

# இரத்தினபுரி, கஹவத்த ஸ்ரீ கிருஷ்ணா கோட்ட மட்ட போட்டிகளில் சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பெல்மதுல்ல கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட விளையாட்டு போட்டிகளின் குழு போட்டிகளில் கஹவத்தை ஸ்ரீகிருஷ்ணா தமிழ் மகா வித்தியாலயம் கிரிக்கெட் போட்டியில் சாம்பியனை வென்றது.

அத்துடன் 20 வயதின் கீழ் கரப்பந்தாட்ட போட்டியில் சாம்பியனும் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் 16 வயதின் கீழான போட்டியில் சாம்பியனும் 18 வயதின் கீழ் மூன்றாம் இடத்தையும் பெற்று இரத்தினபுரி வலய மட்ட போட்டிக்கு தெரிவானர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சமூக வலைத்தளங்களை அளவோடு பயன்படுத்துக!

உலக அளவில் சுமார் 150 கோடிக்கும் அதிகமானோர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றார்கள் எனக் கணிப்பிடப்படுகின்றது. இவர்களில் கணிசமானோர் அதனைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதிலும் பார்க்க அதற்கொ பெரும்பாலும் அடிமையாகி விட்டனர் என்பதே உண்மை.

சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோரில் பெரும்பாலானோர் சிறுவர்களும்,இளைஞர்களும் ஆவர்.

சமூக வலைத்தளங்களை இவ்வளவு பேர் பயன்படுத்துவதற்கும் அதற்கு அடிமையாவதற்கும் முக்கிய காரணம் அது மிக சுதந்திரமாக இருப்பதும், எதை வேண்டுமானாலும் அதில் அறிந்து கொள்ளவும் பகிர்ந்துகொள்ளவும் முடியும் என்பதுமாகும்.

உலகமயமாக்கலால் பூமிப்பந்து பூகோளக் கிராமமாகச் சுருங்கி விட்டது. தனித் தனி மனிதர்களாகச் சுருங்கி போய் விட்ட சமூகத்தை சமூக வலைத் தளங்களே இன்று ஒன்றிணைக்கின்றன என்பது உண்மைதான்.

நபர்களுக்கிடையே சிறந்த தொடர்பாடல், சமூகப் பிணைப்பு, வியாபார முன்னேற்றமும், வேகமான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்று நன்நோக்குடன் முனெடுக்கப்பட்ட சமூக வலைத் தளங்கள் இன்று மனித வாழ்வையே அடிமைப்படுத்தும் தவிர்க்க முடியாத தளையாக மாறி வருகின்றமை கண்கூடு.

இந்த வலைத்தளங்களினாக் எந்த அளவிற்கு நன்மை உள்ளதோ அதே அளவிற்கு பயன்படாத விடயங்களும், பாதிப்புகளும் கூட உள்ளன.

இன்று நாம் இருப்பது இந்தக் கையடக்க உலகத்திற்குள்தான். 'உலகமே உள்ளங்கையில் அடங்கி விட்டது' எனப் பெருமிதம் கொள்ளும் மனிதர்கள் தாங்கள்தான் சமூக வலைதளங்களுக்கு அடிமையாகியிருக்கும் சமூகப் பிராணிகள் என்பதை இன்னும் உணரவில்லை.

சமூக வலைதளங்களின் பயன்பாடு என்பது இன்று ஒவ்வொருவரினதும் அத்தியாவசிய தேவையாக - தவிர்க்க முடியாத கட்டாயமாக - உருவெடுத்துள்ளது.

நாளொன்றுக்கு ஒருவர் சுமார் 8 மணி நேரத்திற்கும் மேலான நேரத்தை முகப் புத்தகம், வட்ஸ் - அப், வைபர், இமோ, ஸ்கைப், லைன், இன்ஸ்டர்கிராம், டுவிட்டர், கூகிள், மெஸென்ஞர், பேஸ் டைம், யூ டியூப் போன்ற பல வடிவிலான சமூக வலைதளங்களுடன் மக்கள் செலவிடுகின்றார்கள். இவ்வாறு அடிமையாகி உள்ளவர்களின் ஆர்வத்தை மேலும் அதிகரிப்பது போல் இவை நாளுக்கு நாள் பல புதிய வசதிகளுடன் முன்னேற்றம் அடைந்து அறிமுகமாகி வருகின்றன.

சமூக வலைத்தளங்கள் இளைஞர்களிடையே மனநலப் பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுவதால் அனைவரும் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சமூக ஊடகங்கள் 'பாதுகாப்பானவை என்று நிரூபிக்கப்படவில்லை' எனும் எச்சரிக்கை செய்யும் முத்திரையை பயன்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரபல அமெரிக்க அறிஞரான விவேக் மூர்த்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் 13 முதல் 17 வயதுக் குட்பட்டவர்களில் 95 சதவீதமானோர் சமூக வலைத்தளங்களைப் பயன் படுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இத்னால், அமெரிக்காவில் செயல்படும் அனைத்து சமூக வலைத்தளங்களுக்கும் எச்சரிக்கை முத்திரையினை வெளியிடுமாறு விவேக் மூர்த்தி அமெரிக்க காங்கிரஸிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் நீண்ட நேரம் செலவழிக்கும் போது அவை நம்முடைய நரம்பு மண்டலத்தை நேரடியாகப் பாதிக்கின்றன என வல்லுனர்கள் கூறுகின்றனர். மேலும் இவ்வாறு இருக்கும் நபர்களுக்கு ஏடிஎச்டி எனப்படும் கவனக் குறைபாடு, மனக் குழப்பம், மன அழுத்தம் மற்றும் மனசோர்வு ஆகியவையும் உண்டாவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன எனவும் சுட்டப்படுகின்றது.

தற்போது வலைத்தளங்களில் காலம் கழிப்பவர்களுக்கு குறைவான மனித நேயம், மன அழுத்தம், சோர்வு, ஞாபக மறதி, சுயநலம் போன்ற குணங்கள் காணப்படுவதோடு கண் சார்ந்த நோய்கள், உயர் இரத்த அழுத்தம், இதய நரம்பு பாதிப்புகள் போன்றனவும் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எதையும் அளவோடு பயன்படுத்தினால் நலம். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும் என்பர். சமூக ஊடகங்களின் பயன்பாட்டு விடயத்திலும் இந்த மூதுரை பொருந்தியே வருகின்றது.



# அம்பாறை நாபீர் வெற்றிக்கிண்ணச் சுற்று பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் சம்பியன்!

**(மாளிகைக்காடு)**

அம்பாறை மாவட்ட 32 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் மோதிய கலாநிதி யூ.கே. நாபீர் வெற்றிக்கிண்ண ரி -10 கடினபந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை ஜீனியஸ் விளையாட்டுக் கழகத்தை ஆறு விக்கட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கடந்த இரு மாதங்களாக நடைபெற்று வந்த கலாநிதி உதுமாங்கண்டு நாபீர் வெற்றிக்கிண்ண ரி -10 கடினபந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பும் சாய்ந்தமருது தலைவர் அஸ்ரப் ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கல்முனை ஜீனியஸ் விளையாட்டுக்கழகம் 10 ஓவர்கள் முடிவில் 09 விக்கட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களை பெற்றது. அந்த அணியின் சார்பில் அப்ஹாம் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 09 பந்துகளில் அதிகபட்சமாக 24 ஓட்டங்களை குவித்தார். பந்துவீச்சில் விளாஸ்டர் அணியின் பவாஸ் இரண்டு ஓவர்கள் பந்துவீசி 03 விக்கட்டுகளை வீழ்த்தினார்.

73 எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் 8.5 பந்து வீச்சு ஓவர்களை எதிர்கொண்டு 04 விக்கட்டுக்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் சார்பில் ஆபாக், ஷஹீன் ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடியிருந்தனர். போட்டியின் நாயகனாக ஏ.என்.எம். ஆபாக் மற்றும் தொடரின் நாயகனாக இரண்டு சதமுட்பட குறைந்த பந்துகளில் அதிக ஓட்டங்களை குவித்த அஸாருதீன் தெரிவுசெய்யப்பட்டனர்.

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக தலைவர் எம்.பி.எம். பாஜில் நெறிப்படுத்தலில் கழக தவிசாளர் ஏ.எம்.ஏ. நிசார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதான அனுசரணை வழங்கியிருந்த நாபீர் பௌண்டஷன் தலைவரும், ஈ.சி.எம். நிறுவன பிரதானியுமான பொறியியலாளர் யூ.கே. நாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், கல்முனை சட்டத்தரணிகள் சங்க தலைவர் எம்.ஐ. ரைஸுல் ஹாதி, கிழக்கு மாகாணகூட்டுறவுஊழியர்கள்ஆணைக் குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா உமர், சாய்ந்தமருது பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல். சபூர்தீன், சாய்ந்தமருது அனைத்துப் பொது நிறுவனங்கள் சம்மேளன தலைவர் ஏ.எல்.எம். பரீட், அல்- ஜலால் வித்தியாலய பிரதியதிபர் ரீ.கே.எம். சிராஜ், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனைத் திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.எம்.எம். முனாஸ், தொழிலதிபர் இஃரா யூ.எல். சத்தார் உட்பட சாய்ந்தமருது கிரிக்கெட் சங்க நிர்வாகிகள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.












# பாடசாலைத் தோட்டச் செய்கையில் மாணவர்கள் அதிக ஆர்வத்தில்



(அஸ்ஹர் ,ப்றாஹிம்)

பாடசாலை மாணவர்களை புத்தகக் கல்வியோடு மட்டும் மட்டுப்படுத்தாமல் புறச் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்துவ-தன் மூலம் பொருளாதார ரீதியில் மாண வர்களை உற்சாகப்படுத்த முடியும்.

அந்த வகையில் அநுராதபுர மாவட் டத்தில் மிகவும் பின்தங்கிய இடத்தில் அமைந்துள்ள கலேன்பிந்துனுவெவ மத்திய மகா வித்தியாலய அதிபரின் ஆலோசனையின் பேரில் பாடசாலை வளாகத்தில் செய்கை பண்ணப்பட்ட பாடசாலைத் தோட்டம் அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது.

மிகவும் வறட்சியான பிரதேசமான அநுராதபுரத்தில் ,வ்வாறான முயற்சி யில் ஆசிரியர்களும் மாணவர்க ளும் கற்றல் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் ,ந்தப் பயிர்ச் செய்கை யில் ஈடுபட்டு வெற்றியும் கண்டுள்ள னர்.

,தன் தாக்கம் அதிகமான மாண வர்கள் தமது வீடுகளிலும் வீட்டுத் தோட்ட முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.



# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு தேவையான பொருள்கள் வழங்கி வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையின் தற்போதைய தேவை யாக இருந்த காற்று மெத்தை தொடர் பான கோரிக்கையை வைத்தியசாலை அதிகாரிகள், நாபீர் பவுண்டேஷன் ஸ்தா பகர் பொறியியலாளர் கலாநிதி உது மான்கண்டு நாபீரிடம் முன்வைத்தனர்.

அதன் அடிப்படையில் நேரடியாக வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பொறியியலாளர் கலாநிதி உது மான்கண்டு நாபீர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத் திய அத்தியட்சகர் டாக்டர் பீ.பிரபா விடம் காற்று மெத்தையுடன் வைத் தியசாலைக்கு தேவையாக இருந்த இன்னும் சில பொருள்களையும் வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் உறுப்பினர்கள் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை உத்தி யோகத்தர்கள் மற்றும் பிரதிநிதி கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்னர்.



# இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் கல்லடியில் சர்வதேச யோகா தினம்!

( வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் விவேகானந்தா மனித வள மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச யோகா தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் (21) வெள்ளிக்கிழமை காலை கல்லடி சிவானந்த வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஶ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் ஆகியோர் முன்னிலையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் கலந்து கொண்டார்.

இந்த யோகா பயிற்சியைப் பயிற்றுவிப்பாளர்களான சிவலிங்கம் ஶ்ரீதரன், அழகுராஜா ஜெயகரன் ஆகியோர் நடத்தினர்.

சுமார் 250 பேர் யோகா பயிற்சியை சூரிய ஒளியில் பெற்றனர்.





# வலிகாமம் கல்வி வலய கிரிக்கெட் சுற்று காங்கேசன்துறை நடேஸ்வரா சம்பியன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்களில் கட்டம் 2 இல் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி அண்மையில் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதய கல்லூரியில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி முதலாம் இடத்தையும், யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதய கல்லூரி இரண்டாம் இடத்தையும், யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.





# தம்பலகாமம் பிரதேசத்தில் யானை பெரும் அட்டகாசம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலர் பகுதியில் உள்ள ஈச்ச நகரில் காட்டு யானை பயிர்களைத் துவம்சம் செய்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



இந்தச் சம்பவம் நேற்று (22) அதிகாலை இடம்பெற்றுள்ளது. இதில் பயன் தரும் வாழை, தென்னை, மரவள்ளி உள்ளிட்ட பல மரங்களை யானைகள் துவம்சம் செய்து விட்டு சென்றுள்ளது என்று கவலை தெரிவிக்கின்றனர்.

யானை தொடர்ந்தும் தங்களது ஊருக்குள் இரவு வேளைகளில் தூக்கத்தின் போது வருவால் நிம்மதியாக தூங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தங்களது வீடுகளுக்கும் பயிர்களுக்கும் சேதம் விளைவித்து சென்றுள்ளன என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 15 இற்கும் மேற்பட்ட தென்னை, வாழை மரங்களை யானை முற்றாக நாசமாக்கியுள்ளது என்றும் குறித்த பகுதியில் பாதுகாப்பான யானை வேலி இன்மையால் இந்தச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் தங்களையும் தங்கள் உடைமைகளையும் யானையிடம் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.



# 40 லட்சம் ரூபா பெறுமதியான உயிர்காப்பு இயந்திரம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்பு!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு 40 லட்சம் ரூபா பெறுமதியான உயிர்காப்பு இயந்திரம் நேற்று முன்தினம் (21) வெள்ளிக்கிழமை அன்பளிப்புச் செய்யப்பட்டது.

நுகேகொடயைச் சேர்ந்த திருமதி. குணசேகர இந்த உபகரணங்களை அன்பளிப்பு செய்திருந்தார். அவருக்கேற்பட்ட அனுபவமே இத்தகைய உதவி செய்யக் காரணமாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

அவருடைய பிள்ளைப் பிறப்பின் போது இத்தகைய உயிர் காப்பு இயந்திரம் இல்லாமையால் ஏற்பட்ட ஆபத்தையும் துன்பத்தையும் ஏனையோர் அனுபவிக்கக் கூடாது என்பதற்காக டாக்டர் திருமதி சிறிநீதனூடாக இதனை கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கி வைத்தார்.

இந்த நன்கொடையில் 3 மில்லியன் ரூபா பெறுமதியான அதிநவீன சிசு இன்குபேட்டரும், 1 மில்லியன் ரூபா பெறுமதியான உயர் பாயும் ஆக்ஸிஜன் இயந்திரமும் உள்ளடங்கும்.

இந்த முக்கியமான உபகரணங்களைக் கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஏ.பி.ஆர்.எஸ். சந்திரசேனவிடம் நன்கொடையாளிகள் வழங்கி வைத்தனர். வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.இராஜேந்திரனும் சமூகமளித்திருந்தார்.





# மன்னாரில் பொசென் பௌர்ணமி விழா!

**( வாஸ் கூஞ்ஞ, மன்னார் லெம்பெட்)**

பௌத்த மக்களால் கொண்டாடப் படும் பொசென் பௌர்ணமி விழா இலங்கையில் பல பாகங்களிலும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்ட பொழுதும் மன்னாரிலும் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மன்னாரில் இந்த நிகழ்வானது தள்ளாடி 54 ஆவது காலாட்படை பிரிவின் ஏற்பாட்டில் இலங்கை இராணுவத்தினர், கடற்படை மற்றும் பொலிஸார் ஒன்றிணைந்து இந்த நிகழ்வைத் தள்ளாடி பகுதியில் அலங்கார பந்தல்களை வடிவமைத்துக் கொண்டாடினர்.

இந்த நிகழ்வுக்கு நான்கு சமயத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.



# சுத்தமான மற்றும் பசுமை நிகழ்வு!


**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

முஸ்லிம் ஹேன்ட்ஸ் ஸ்ரீலங்கா கொழும்பு மத்தி வை.எம்.எம்.ஏ. அமைப்புடன் இணைந்து கொழும்பில் உள்ள க்ரோ ஐலண்ட் பீச் பூங்காவில் பல நிகழ்வுகள் அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

“சுத்தமான மற்றும் பசுமை, கால நிலை மற்றும் சுற்றுச்சூழலுக்கான சமூக நடவடிக்கை” மூலம் நமது பூங்காவை அழகுபடுத்துவோம், சுற்றுசூழல் கண்காணிப்பு குறித்து கல்வி கற்போம், சமூக பொறுப்புணர்வு உணர்வை வளர்ப்போம், பூங்காவை சுத்தம் செய்தல், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், மரம் நடுதல் மற்றும் மீள்சுழற்சி என்பன இந்த நிகழ்வில் அடங்கியிருந்தன.







Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# அக்கரைப்பற்று நகரை அசத்திய இன நல்லிணக்க பெரஹரா நிகழ்வு

( வி.ரி.சகாதேவராஜா)


அக்கரைப்பற்று நகரை அசத்திய இன நல்லிணக்க பொசன் பெரஹரா பெருநிகழ்வு நேற்று சனிக்கிழமை இரவு கோலாகலமாக நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயராம விகாரையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொசன் பெரஹரா நிகழ்வானது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டார். ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் இராசரத்தினம் திரவியராஜ் சமூகமளித்திருந்தார். ஏனைய அதிகாரிகளும் பிரசன்னமாகியி ருந்தனர்.

இந்தப் பொசோன் பெரஹரா, ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு அருகிலிருந்து ஆரம்பமாகி சாகாமம் பிரதான வீதி ஊடாக அக்கரைப்பற்று மாநகரை வந்தடைந்து பின்னர் அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதி ஊடாக ஸ்ரீ விஜயராம விகாரையை சென்றடைந்தது.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை கலாச்சார நிகழ்வுகளும் இடம் பெற்றன.













EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# வெப்பத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 143 ஆக உயர்வு



இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வெப்ப அலையின் தாக்கம் நீடித்து வரும் நிலையில், மார்ச் 1 முதல் ஜூன் 20 வரையிலான காலகட்டத்தில் 'வெப்ப வாதம்' காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 143 ஆக உயர்ந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இருப்பினும், வெப்பவாதத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதுதொடர்பான முழுமையாகதகவல்களைமாநிலங்கள்வழங்காததால் தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையத்தால் வெளியிடப்படும் அறிக்கையில் அதிகாரபூர்வ உயிரிழப்புகள் குறித்த இறுதி தகவல்கள் வெளியாகவில்லை.

அதேபோல் சில சுகாதார மையங்களும் வெப்பவாதத்தால் உயிரிழந்தோர் குறித்த எண்ணிக்கையை முழுமையாக வெளியிடவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெப்பவாதத்தால் ஜூன் 20 ஆம் திகதி மட்டுமே 14 பேர் உயிரிழந்தனர் என அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 9 பேர் இதே காரணத்தால் உயிரிழந்திருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படும் நிலையில் மார்ச் 1 முதல் ஜூன் 20 வரையிலான காலகட்டத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 114 இல் இருந்து 143 ஆக அதிகரித்துள்ளது.

அதிகபட்சமாக உத்தரபிரதேசத்தில் 35 பேரும், டில்லியில் 21 பேரும், பீகார் மற்றும் இராஜஸ்தானில் தலா 17 பேரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும், வெப்பவாதத்தால் 41 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இந்திய செய்திகள் குறிப்பிடுகின்றன.

# மோடியின் தகுதியற்ற ஆட்சியால் மாணவர்களுக்கு அச்சுறுத்தல்



## ராகுல் காந்தி குற்றச்சாட்டு

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சி காலத்தில் கல்வி அமைப்பு முழுமையாக சீரழிக்கப்படுவதாக காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

நீட் முதுநிலை தேர்வு ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர்,

"நரேந்திர மோடியின் தகுதியற்ற ஆட்சி மாணவர்களின் எதிர்காலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இந்த நாட்டின் எதிர்காலத்தை கட்டாயம் காப்பாற்றியே ஆகவேண்டும்.

மேலும், பா.ஜ.க. ஆட்சி காலத்தில் மாணவர்கள் படிக்க கட்டாயப்படுத்தப்படவில்லை. மாறாக தங்களின் எதிர்காலத்தை பாதுகாத்துக் கொள்ள மாணவர்கள் அரசுடன் போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது."– என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் மருத்துவ கல்வியில் இணைவதற்காக நீட் தேர்வு நடத்தப்படுகிறது.

தேசிய தேர்வு முகமை நடத்தும் நீட் தேர்வு இவ்வாண்டு மே மாதம் நடைபெற்ற நிலையில் அதன் தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியானது.

இதனை தொடர்ந்து, நீட் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றதாக பல குற்றச்சாட்டுக்கள் எழுந்த நிலையில், நடத்தப்பட்ட தேர்வை இரத்து செய்து மறுதேர்வு நடத்த உத்தரவிடக் கோரி, உச்சநீதிமன்றத்தில் ஏராளமான வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# தி.மு.கவின் கண்டன ஆர்ப்பாட்டம் மறு அறிவித்தல் வரை ஒத்திவைப்பு

தி.மு.க.மாணவரணிசார்பில்24ஆம் திகதி நீட் தேர்வுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவிருந்த நிலையில், அந்த ஆர்ப்பாட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தி.மு.க. மாணவரணி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி, தி.மு.க. மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி எழிலரசன் தலைமையில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நீட் தேர்வை மீண்டும் நடத்த வேண்டும் என மாணவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

67 மாணவர்கள் முழு மதிப்பெண் பெற்றதும், அவர்களில் பெரும்பாலானோர் அரியானா மாநிலத்தில் ஒரே மையத்தில் தேர்வு எழுதியவர்கள் என்பதாலும், பரீட்சை வினாத்தாள் வெளியானதாக பீகார் பொலிஸார் தெரிவித்திருந்ததும் நீட் தேர்வை மீள நடத்த வேண்டும் என தெரிவிப்பதற்கு முக்கிய காரணங்களாகும்.

மேலும், 1500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு கருணை மதிப்பெண் வழங்கியதும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பின்னர் உச்சநீதிமன்றத்தில் கருணை மதிப்பெண் ரத்து செய்யப்படும் என தேசிய தேர்வு முகமை தெரிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே, தி.மு.க. மாணவரணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராக கண்டன பேரணி முன்னெடுக்கப்படவிருந்தது. எனினும், தற்போது பேரணி ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நீட் வினாத்தாள் இந்திய மதிப்பின்படி ரூபாய் 32 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டது என்று பீஹாரைச் சேர்ந்த மாணவர் ஒருவர் வாக்குமூலம் அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# தாய்வானில் சுதந்திரம் கோருவோருக்கு மரண தண்டனை; சீனா கடும் எச்சரிக்கை

தாய்வானின் சுதந்திரம் குறித்து தீவிர நிலைப்பாட்டைக் கொண்டுள்ள வர்களுக்கு மரண தண்டனை விதிக் கப்படும் என சீனா எச்சரிக்கை விடுத் துள்ளது.

இது தொடர்பாக நீதிமன்றங்கள், சட்ட அமலாக்க அமைப்புகள் உள்ளிட்ட வற்றுக்கு அரசு அனுப்பியுள்ள சுற்ற றிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதன்படி, சீனாவிடமிருந்து, தாய் வானுக்கு சுதந்திரம் பெற்றுத் தரவேண்டும் என தீவிரமாக செயற்படுப வர்களுக்கு எதிராக பிரிவினைவா தச் சட்டத்தின்கீழ் இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சுதந்திரம் கோரும் அமைப்புகளின் தலைவர்களுக்கு, மரண தண்டனை விதிக்கப்படும் என சீன அரச ஊடகமொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

கடந்த 1949 ஆம் ஆண்டில் முடிந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர், தாய்வான் பிரதேசம் சுதந்திரமாக செயல்பட்டு வருகிறது.

எனினும், அந்தத் தீவை தங்கள் நாட்டின் ஒரு பகுதியாகவே சீனா கருது கிறது. தாய்வானும் தன்னை தனி நாடாக இதுவரை பிரகடனப்படுத்திக் கொள்ளவில்லை.

இந்த நிலையில், தாய்வானை எப் போது வேண்டுமானாலும் தங்களுடன் இணைத்துக்கொள்ளும் உரிமை தங்களுக்கு உள்ளதாக சீனா கூறி வருகின்றது.

தேவையேற்படின், இராணுவ வலி மையைக் கூட இதற்காகப் பயன்படுத்த லாம் என சீனா எச்சரிக்கை விடுத் துள்ளது.

இந்தச் சூழலில், தாய்வான் சுதந் திரத்தை தீவிரமாக வலியுறுத்தும் தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று சீனா அறிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவின் இறையாண்மையை காப்பாற்ற அணுவாயுதத்தை பயன்படுத்தவுள்ளோம்

### விளாடிமிர் புடின் எச்சரிக்கை



ரஷ்யாவின் இறையாண்மையை காப்பாற்ற கடைசி அஸ்திர மாக அணுவாயுதத்தை பயன்படுத்தவுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

மேலும், ரஷ்யா தனது உலகின் மிகப்பெரிய அணு ஆயு தங்களின் ஆயுதக் களஞ்சியத்தை ஒரு தடுப்பாக தற்காத்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், அணுசக்தி முக்கோணத்தை மூலோ பாயத் தடுப்புக்கான உத்தரவாதமாக மேலும் மேம்படுத்தவும், உலகில் அதிகார சமநிலையைப் பாதுகாக்கவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்று புடின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரஷ்யாவின் அணுசக்தி முக்கோணம் என்பது அதன் நிலம், கடல் மற்றும் வான்வழி ஏவக்கூடிய அணு ஏவுகணைகளைக் குறிப்பதாகும்.



## உக்ரைனின் எரிசக்தி கட்டமைப்பு மீது ரஷ்யா வான் தாக்குதல் நடத்தியது

உக்ரைனின் எரிசக்தி கட்டமைப்பு மீது இலக்கு வைத்து ரஷ்யா வான் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில், 2 பேர் உயிரிழந்த நிலையில் 18 பேர் காயமடைந்துள்ளனர் என உக்ரைன் தெரிவித் துள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் உக்ரைனின் எரிசக்தி கட்டமைப்பை இலக்கு வைத்து ரஷ்யா நடத்தும் 8 ஆவது தாக்குதல் இதுவாகும் என குறிப்பிடப்படுகின்றது.

இந்த தாக்குதல்களினால் உக்ரைனில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதாக சர்வதேச ஊடங்கள் தெரிவிக்கின் றன.

ரஷ்யாவின் இந்த புதிய தாக்குதலில் 12 ஏவுகணை களையும் முறியடித்துள்ளதாக உக்ரைன் அறிவித்துள் ளது.

பக்கங்கள் - 4

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 23/06/2024

## ஸ்காபரோ உணவகத் தீயில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

### மரணம் குறித்து பொலிஸார் விசாரணை

ஒன்ராரியோ, ஜூன் 24

நேற்று ஜூன் 22ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஸ்காபரோவில் உள்ள உணவகத்தில் C2 ▶

# அல்பேர்ட்டா புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக கல்கரி முன்னாள் மேயர் நெனஷி



அல்பேர்ட்டா, ஜூன் 23

அல்பேர்ட்டா புதிய ஜனநாயகக் கட்சியின் பாரம்பரியக் கூட்டத்திற்கு வெளியே – வழமைக்கு மாறாக – புதிய உறுப்பினர்களுக்கு கல்கரியின் முன்னாள் மேயர் நஹீத் நென்ஷி விடுத்த வேண்டுகோள், அவரை கட்சியின் தலைமைப் பதவிக்கு உயர்த்தியுள்ளது.

கட்சியின் மிகப்பெரிய தலைமைப் போட்டியின் முதல் வாக்களிப்பில் 86 சதவீத வாக்குகளுடன் எளிதாக வெற்றியைப் பெற்று, புதிய ஜனநாயகக் கட்சியை வழிநடத்த கால்கரியிலிருந்து நென்ஷி தெரிவாகியுள்ளார். C2 ▶




# பலஸ்தீனிய சார்புப் போராட்டக்காரர்கள் மொண்ட்ரீயலில் புதிய முகாம் அமைப்பு!

கியூபெக், ஜூன் 23

மொண்ட்ரீயலின் வில்லே - மேரி பரோவில் ஒரு புதிய பலஸ்தீனிய சார்பு போராட்ட முகாம் உருவாகியுள்ளது.

பலஸ்தீனத்திற்கான கூட்டணியின் உறுப்பினர்கள் ஜூன் 22ஆம் திகதியன்று இது குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

விக்டோரியா சதுக்கத்தில் மதியம் 1:20 மணியளவில் கட்டுமானப் பொருள்களைப் பயன்படுத்தி போராட்டக்காரர்கள் முகாம் அமைத்துத் தங்களைத் தற்காத்துக் கொள்ளத் தொடங்கியதை மொண்ட்ரீயல் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். C2 ▶

# கியூபெக்கின் போர்ட் கார்டியரில் காட்டுத் தீ விடாது தொடர்கின்றது


**கியூபெக், ஜூன் 23**

கியூபெக்கின் போர்ட் கார்டியரின் வடக்கு கரையோர நகரத்திலிருந்து பகுதியளவு மக்கள் வெளியேற்றத்தைத் தூண்டிய காட்டுத் தீ சீராகத் தொடர்கிறது.

உள்ளூர் அவசரகால நிலையை நீடித்ததால் சில குடியிருப்பாளர்கள் வெளியேறும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜூன் 21ஆம் திகதியன்று உள்ளூர் உள்கட்டமைப்பில் தீ பரவத் தொடங்கியபோது மூன்று குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 1,000 குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, C2 ▶





# கனடாவின் நயாகரா சுழலில் சிக்கி மாயமான இந்திய இளைஞரைத் தேடும் பணி நிறுத்தம்!

## அவர் இறந்திருக்கலாம் எனத் தெரிவிப்பு

கனடாவின் நயாகராவில் சுழலில் சிக்கி மாயமான இந்திய இளைஞரைத் தொடர்ந்து தேடுவது தொடர்பில் நண்பர்களும் உறவினர்களும் முன்வைத்த கோரிக்கையை பொலிசார் நிராகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நயாகரா நதியில் சுழலில் சிக்கி மாயமான 25 வயது சுஹ்பம் மன்சண்டா என்ற இளைஞர் இறந்திருக்கலாம் என்றே நம்பப்படுகிறது. முந்திய வாரம் சனிக்கிழமை ஏற்பட்ட இந்த சம்பவத்தில் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கை முன்னெடுத்தும் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

இந்த நிலையில் நண்பர்கள் மற்றும் உறவினரின் கோரிக்கைகளை நிராகரித்து தேடுதல் நடவடிக்கையை கைவிடப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து கனடா வந்த மன்சண்டா, இங்கு ஓஷாவாவில் உள்ள டர்ஹாம் கல்லூரியில் இணைந்து பட்டம் பெற்றுள்ளார்.

தொரோல்ட் பகுதியில் வசித்து வந்த இவர் கடந்த 6 மாதங்களாக செென் கதரின்ஸ் என்ற மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றியும் வந்துள்ளார். இயற்கை விரும்பியான இவர் ஜூன் 15 ஆம் திகதி நண்பர்களுடன் நயாகரா நதிப்பகுதிக்கு சென்றுள்ளார்.

ஆனால் பாறை ஒன்றில் இருந்து கால்தவறி கீழே விழுந்த மன்சண்டா சுழலில் சிக்கி மாயமாகியுள்ளார். இதனையடுத்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த நயாகரா பிராந்திய காவல்துறை, நயாகரா நீர் வீழ்ச்சி தீயணைப்பு துறை மற்றும் கனடிய கடலோர காவல்படை ஆகியோர் இணைந்து தேடினர் ஆனால் பலனில்லை.

நண்பர்கள் மற்றும் உறவினர்கள் சமூக ஊடகம் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்தியமையுடன், தொடர்ந்து தேடவும் பொலிஸாரெள ஊக்குவித்துள்ளனர். ஆனால் கடந்த புதன்கிழமை தேடுதல் நடவடிக்கைகளை கைவிட்ட பொலிசார், மன்சண்டா இறந்திருக்கலாம் என்றும், கண்காணிப்பு தொடரும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

---

**அல்பேர்ட்டா...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாரம்பரியமாக பழமைவாத மாகாணத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் கருத்தியல் அடிப்படைக்கும் அரசியல் நடைமுறைவாதத்திற்கும் இடையிலான போராக இந்த போட்டி கருதப்பட்டது.

பிரசாரத்தின் போது 85,000 ஆக ஐந்து மடங்கு உயர்ந்த கட்சி உறுப்பினர்கள், நென்ஷியின் கூர்மையான புத்திசாலித்தனம் மற்றும் தொலை நோக்கிற்கு வாக்களித்தனர்.

முதல்வர் டானியல் ஸ்மித்தின் ஐக்கிய கன்சர்வேடிவ் அரசாங்கத்தை சிறிய மனப்பான்மை கொண்டவர்கள் என்று விவரிக்க, சனிக்கிழமையன்று கல்கரியில் தனது வெற்றி உரையைப் பயன்படுத்தி, நென்ஷி தனது புதிய அரசியல் எதிரிக்கு எதிராக தாக்குதல்களை நடத்துவதில் நேரத்தை செலவிடவில்லை.

2027 பொதுத் தேர்தலில் புதிய ஜன நாயகக் கட்சியின் வெற்றி தவிர்க்க முடியாததாக இருக்கும் வகையில், பிரசாரத்திற்குத் தயாராக இருக்கும் இயந்திரத்தை உருவாக்க உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களை நென்ஷி ஊக்குவித்துள்ளார்.

---

**ஸ்காபரோ...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட தீ விபத்தில் இருந்து இழுக்கப்பட்ட ஒரு நபரின் மரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கென்னடி ரோடு மற்றும் லாரன்ஸ் அவென்யூ ஈஸ்ட் பகுதியில் உள்ள மோலன் லாவ் டேவர்னா என்ற உணவகத்திற்கு அதிகாலை 2 மணிக்கு முன்னதாகவே தீ விபத்து பற்றிய தகவல்களுக்காக அவசரக் குழுவினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

றொறன்ரோ தீயணைப்புத் துறையினரால் தீயை அணைக்க முடிந்ததாகவும், கட்டடத்திற்குள் ஓர்ஆணின் சடலத்தைக் கண்டுபிடித்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த நபர் 26 வயதான டொராண்டோவில் வசிக்கும் ஓ'பிறயன் டொன் என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் கூற்றுப்படி, விசாரணையின் மூலம், தீ விபத்து ஏற்பட்ட நேரத்தில் ஒரு வாகனம் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றதை அறிந்ததாக தெரிவித்துள்ளனர்.

---

**பலஸ்தீனிய...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையைகண்காணித்துவருகின்றனர் எனவும் ஆனால் யாரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனடா மற்றும் அமெரிக்கா முழுவதும் உள்ள பல்கலைக்கழக வளாகங்களில் தங்களுடைய முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாக எதிர்ப்பாளர்கள் கூறுகிறார்கள்.

---

**கியூபெக்கின்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருகிவரும் தீப்பிழம்பு, பார்க் ப்ரூனல் மற்றும் பார்க் டொமினிக் பகுதிகளில் இருந்து வசிப்பவர்களையும், பாதை 138க்கு வடக்கே வசிப்பவர்களையும் வெளியேற்ற உத்தரவிட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.




# மோட்டார் சைக்கிள்கள் மோதல் ஒருவர் மரணம்; ஒருவர் காயம்

கியூபெக், ஜூன் 22

கியூபெக்கின் பாஸ்-செண்ட் லோரன்ட் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் மோதியதில் 66 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செயின்ட்-லூஸில் பாதை 132இல் இந்த விபத்து வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காயமுற்ற நபர் ஆபத்தான நிலையில் இருந்தார் எனவும், மருத்துவமனைக்கு அவர் கொண்டு விரையப்பட்டார் எனவும், அங்கு அவர் இறந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டதாகவும் மாகாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதே திசையில் பயணித்த மற்றொரு மோட்டார் சைக்கிள் வேகத்தை குறைத்ததை கவனிக்காமல் அந்த நபர் ஒரு பாதையில் ஓட்டிச் சென்றார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த 50 வயதுடைய நபர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

விபத்துக்கான காரணம் என்ன என்பதை அறிய, மோதல்களில் நிபுணத்துவம் பெற்ற புலனாய்வாளர் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டார்.




# ஆள்களைத் தாக்கியவர் பொலிஸாரினால் கைது

ஒன்ராரியோ, ஜூன் 23

சந்தேக நபர் ஒருவரால் இரண்டு பெண்களும் ஆண் ஒருவரும் தனித்தனி சந்தர்ப்பங்களில் தாக்கப்பட்டமையை அடுத்து சம்பந்தப்பட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜூன் 20ஆம் திகதி காலை 9:15 மணி முதல் 9:30 மணி வரை டேவிட் பெக்காட் சதுக்கத்தில் முதல் சம்பவம் நடந்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

இரண்டாவது சம்பவம் அடுத்த நாள், வெள்ளிக்கிழமை, ஜூன் 21 அன்று இடம்பெற்றுள்ளது.

காலை 9 மணியளவில் அடிலெய்ட் தெரு மேற்கு மற்றும் பீட்டர் தெரு சந்திப்பு பகுதியில், பாதிக்கப்பட்டவர் ஓர் ஆண் குற்றவாளியால் தலையின் பின்புறத்தில் தாக்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது,

பின்னர், ப்ளூ ஜேஸ் வேயில் உள்ள ஹோட்டலுக்கு வெளியே இருந்த இரண்டாவது பாதிக்கப்பட்ட பெண்ணை நோக்கி குற்றம் சாட்டப்பட்டவர் ஓடினார் எனப் பொலிஸார் கூறுகின்றனர்.




# வொஹான் சூட்டுச் சம்பவத்தில் ஒரு குழந்தையும் உயிரிழந்தது

ஒன்ராரியோ, ஜுன் 23

ஒன்ராரியோவின் வொஹான் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் ஒரு குழந்தையும் 40 வயதுடைய ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு முன்னதாக நகரின் வூட்பிரிட்ஜ் சுற்றுப்புறத்தில் உள்ள மேஜர் மெக்கென்சி டிரைவ் மற்றும் வெஸ்டன் ரோடு பகுதியில் உள்ள காசா நோவா டிரைவில் உள்ள வீட்டிற்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

அந்த நேரத்தில் நான்கு பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வீட்டுக்குள் இருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பலியானவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் மூன்று பேர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் இருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முதலில் வெளியான செய்தியில் இச்சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்றே கூறப்பட்டது.




# பதின்ம வயதுச் சிறுவன் வாகன விபத்தில் காயம்

ஒன்ராரியோ, ஜுன் 23

ஜுன் 21ஆம் திகதியன்று மாலை எட்டோபிகொக் பகுதியில் வாகனம் ஒன்றுடன் மோதுண்ட பதின்ம வயது சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

பிரின்ஸ் எட்வர்ட் டிரைவ் மற்றும் புளூர் ஸ்ட்ரீட் வெஸ்ட் அருகில் இந்த விபத்து மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

16 வயது சிறுவன், உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளான்.

பொலிஸாரின் கூற்றுப்படி, சாரதி சம்பவ இடத்திலேயே இருந்ததார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து சில மணிநேரத்திற்கு ப்ளூருக்கு தெற்கே உள்ள பிரின்ஸ் எட்வர்ட் டிரைவ் இரு திசைகளிலும் மூடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.